## மார்ச் - 26 - தவக்கால நான்காம் ஞாயிறு

துாங்குகிறவனே விழித்தெழு இறந்தவனே உயிர்பெற்றெழு கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்"(எபே.5:14)

---

### முதல் வாசகம் : 1 சாமுவேல் 16 : 1,6 – 7,10 – 13

ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "இஸ்ரயேலின் அரசராகச் சவுல் இல்லாதவாறு நான் அவனைப் புறக்கணித்ததை நீ அறிந்திருந்தும், நீ எவ்வளவு காலம் அவனுக்காகத் துக்கம் கொண்டாடுவாய்? உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டுபோ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன் ஏனெனில் அவன் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன்" என்றார். அவர்கள் வந்தபோது அவர் எலியாவைப் பார்த்தவுடனே, ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவனாகத்தான் இருக்கும்" என்று எண்ணினார். ஆனால் ஆண்டவர் சாமுவேலிடம், அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே. ஏனெனில் நான் அவனைப் புறங்கணித்து விட்டேன். மனிதர் பார்ப்பதுபோல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார்" என்றார். இவ்வாறு ஈசாய் தம் ஏழு புதல்வரைசச் சாமுவேல் முன்பாகக் கடந்துபோகச்செய்தார். இவர்களையும் ஆண்டவர் தேர்ந்து கொள்ளவிலை" என்றார் சாமுவேல். தொடர்ந்து சாமுவேல் ஈசாயைப் பார்த்து "உன் பிள்ளைகள் இத்தனைப் பேர்தானா?" என்று கேட்க, "இன்னொரு சிறுவன் இருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருகிறான்" என்று பதிலளித்தார் ஈசாய். அதற்கு சாமுவேல் அவரிடம், "ஆளனுப்பி அவனை அழைத்து வா ஏனெனில் அவன் வரும்வரை நான் உணவருந்த மாட்டேன்" என்றார். ஈசாய் ஆளனுப்பி அவனை அழைத்து வந்தார். அவன் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடன் இருந்தான். ஆண்டவர் சாமுவேலிடம், "தேர்ந்துகொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்!" என்றார். உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப்பொழிவு செய்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை

### இரண்டாம் வாசகம் : ஏபேசியர் 5 : 8- 14

சகோதர சகோதரிகளே! ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள். ஏனெனில், ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கிறது. ஆண்டவருக்கு உகந்தது எது என்பதை ஆராய்ந்து பாருங்கள். பயனற்ற இருளின் செயல்களைச் செய்கிறவர்களோடு உங்களுக்கு உறவு வேண்டாம். அவை குற்றமென எடுத்துக்காட்டுங்கள். அவர்கள் மறைவில் செய்பவற்றைச் சொல்லக்கூட வெட்கமாக இருக்கிறது. அவர்கள் செய்வதை எல்லாம் குற்றமென ஒளியானது எடுத்துக்காட்டும்போது அவற்றின் உண்மைநிலை வெளியாகிறது. அவ்வாறு தெளிவாக்கப்படுவதெல்லாம் ஒளிமயமாகிறது. ஆதலால், "துாங்குகிறவனே, விழித்தெழு் இறந்தவனே, உயிர்பெற்றெழு் கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்" என்று கூறப்பட்டுள்ளது.

### நற்செய்தி : யோவான் 9 : 1, 6-9, 13 – 17, 34 – 38

அக்காலத்தில், இயேசு சென்றுகொண்டிருக்கும்போது பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச்சேற்றைப் பார்வையற்றவருடைய கண்களில் பூசி, "நீர் சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும்" என்றார். சிலோவாம் என்பதற்கு "அனுப்பப்பட்டவர்" என்பது பொருள். அவரும் போய்க் கழுவிப் பார்வை பெற்றுத் திரும்பி வந்தார். அக்கம் பக்கத்தாரும், அவர் பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததை முன்பு பார்த்திருந்தோரும், "இங்கே அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவர் இவர் அல்லவா?" என்று பேசிக்கொண்டனர். சிலர், "அவரே" என்றனர் வேறு சிலர் "அவரல்ல் அவரைப்போல் இவரும் இருக்கிறார்" என்றனர். ஆனால் பார்வை பெற்றவர், "நான்தான் அவன்" என்றார். முன்பு பார்வையற்றவராய் இருந்த அவரை அவர்கள் பரிசேயரிடம் கூட்டிவந்தார்கள். இயேசு சேறு உண்டாக்கி அவருக்குப் பார்வை அளித்தநாள் ஓர் ஓய்வுநாள். எனவே, "எப்படிப் பார்வை பெற்றாய்?" என்னும் அதே கேள்வியைப் பரிசேயரும் கேட்டனர். பரிசேயருள் சிலர், "ஓய்வுநாள் சட்டத்தைக் கடைப்பிடிக்காத இந்த ஆள் கடவுளிடமிருந்து வந்திருக்க முடியாது" என்று பேசிக் கொண்டனர். ஆனால் வேறு சிலர், "பாவியான ஒரு மனிதரால் இத்தகைய அரும் அடையாளங்களைச் செய்ய இயலுமா?" என்று கேட்டனர். இவ்வாறு அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. அவர்கள் பார்வையற்றிருந்தவரிடம், "உனக்குப் பார்வை அளித்த அந்த "ஆளைக் குறித்து நீ என்ன சொல்கிறாய்?" என்று மீண்டும் கேட்டனர். "அவர் ஓர் இறைவாக்கினர்" என்றார் பார்வை பெற்றவர். அவர்கள் அவரைப் பார்த்து, "பிறப்பிலிருந்தே பாவத்தில் மூழ்கிக் கிடக்கும் நீயா எங்களுக்குக் கற்றுத் தருகிறாய்?" என்ற சொல்லி அவரை வெளியே தள்ளினர். யூதர்கள் அவரை வெளியே தள்ளிவிட்டதைப்பற்றி இயேசு கேள்விப்பட்டார் பின் அவரைக் கண்டபோது, "மானிடமகனிடம் நீர் நம்பிக்கை கொள்கிறீரா?" என்று கேட்டார். அவர் மறுமொழியாக, "ஐயா, அவர் யார்? சொல்லும். அப்போது நானும் அவரிடம் நம்பிக்கை கொள்வேன்" என்றார். இயேசு அவரிடம், "நீர் அவரைப் பார்த்திருக்கிறீர்! உம்மோடு பேசிக்கொண்டிருப்பவரே அவர்" என்றார். அவர், "ஆண்டவரே, நம்பிக்கைகொள்கிறேன்" என்று கூறி அவரை வணங்கினார்.

**தியானம்:** அன்பும் பரிவும் மிக்கவரான இறை தந்தையிடம் திரும்ப வந்து நாம் புதிப்பிக்கப்பட எம்மை ஒப்படைக்க இன்றைய நான்காம் ஞாயிறுவார இறைவார்த்தைப் பகுதிகள் எம்மை அழைக்கின்றன. மனிதர்களாகிய நாம் பலவீனர்கள் இறைவனது சாயலாக படைக்கப்பட்டதால் அவரைப் போன்று துாயவர்களாக வாழ அவர் விரும்புகின்றார். "உலகின் ஒளி நானே என்னைப் பின் செல்பவர் இருளில் நடவான்" என்கின்றார் இயேசு. ஒளி என்பது உண்மைக்கும் நன்மைக்கும் உருவகமாய் உள்ளது. கடவுள் உண்மையும் நன்மையும் ஆனவர். எமது இருளை அகற்ற இயேசுவின் ஒளி நமக்கு வேணடும். தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். (யோவா.3:20) நற்செய்தியில் பார்வையற்றவருக்கு பார்வை அளித்த இயேசுவின் புதுமையை நாம் பார்க்கின்றோம். ராபி பார்வையற்றவராய் இருப்பதற்கு அவர் செய்த பாவமா? அல்லது இவரது பெற்றோர் செய்த பாவமா? என்ற சீடரின் கேள்விக்கு கடவுளின் செயல் அவர் வழியாக செயல்படவே இவர் இப்படிப் பிறந்தார் என்றார். பார்வையற்றோருக்கும் பாவவாழ்வில் மூழ்கி இருப்போருக்கும் இறைமகன் இயேசு ஒளியைக் கொடுக்கின்றார். அந்த ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கின்றது. எமது பாவ இருளை வெளிப்படையாக ஏற்றுக்கொள்வோம். பாவச்சேற்றில் விழுகின்ற பெலவீனர்கள் நாம் என்பதை ஏற்றுக்கொள்வோம். எமது பெலத்திலும் சுய அறிவிலும் தங்கி வாழாது கடவுளின ஆவி எம்மில் செயல்பட இடமளிப்போம். இன்றைய இரண்டாவது வாசகம் கூறுவதுபோன்று ஆண்டவரோடு இணைந்திருந்து அவரது ஒளியைப் பெற்ற மக்களாக வாழ்வோம்.